மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலைத் தொடங்குவதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். கலப்படத்தைத் தடை செய்வதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கலாம்.

Deposits of iron ore.

* 320 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any agency of the U.N. is (i) mapping and (ii) surveying the iron ore deposits in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்த இரும்புக் கனி வள ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசின் மூலமாகத் தான் இந்த யு.என்.டி. ப்ராஜக்ட் என்ற திட்டத்தில் யு.என்.டி. அலுவலர்கள் இங்கு பணியாற்றி வருகிறார்கள்.

மைகா படிவங்கள்

■321 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நற்சாந்துப்பட்டியை அடுத்திருக்கும் இடுக்குமலைப் பகுதியில் மைகா படிவங்கள் தென்படுவது குறித்து அரசு ஆய்வு நடத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விளைவு என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) & (b) The Geological Survey of India has carried out systematic Geological mapping in the hills near Narchanthupatti, Tirumayam taluk of Tiruchirappalli District during the years 1960-61 and 1961-62. Biotite (a black variety of mica) has been noticed to occur in Charnockite (granites) in a quarry near Narchanthupatti and the occurrence is reported to be of no economic importance.

■322 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு அருகே எரிச்ச நத்தம் கிராமத்தில் " மைக்கா " இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

---

a 211–212-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.